EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 5

## பெண்பாற் புலவர்களும் பெண்ணியக் கவிஞர்களும்

*முனைவர் பா. இரா. கவிதா*
தமிழ்த்துறை
ஜி.டி.என்.கல்லூரி,
திண்டுக்கல்.
மின்னஞ்சல்: kavitha30579@gmail.com

## *முன்னுரை*

சமூகம் என்பது ஆண், பெண் என்னும் உறவை அடிப்படையாகக் கொண்டது. ஆண்மை, பெண்மை என்பன இருகண்கள் போன்றது. பெண் துணை இல்லாத ஓர் ஆணின் வாழ்வோ, ஓர் ஆண் இணை இல்லாத ஒரு பெண்ணின் வாழ்வோ பயனற்றது என்பது ஒரு நிதர்சன உண்மை.

இலக்கியம் தொடங்கிய காலத்தில் பெண்கள் உயர்வுடையவர்களாகவும், தனித்தன்மை உடையவர்களாகவும் திகழ்ந்துள்ளனர் என சங்க இலக்கியப் பாடல்கள் வழி அறிய முடிகின்றன.

நவீன பெண் கவிஞர்கள் தம் கவிதைகள் மூலம் ஆணாதிக்க மனோபாவ எதிர்ப்பு இல்லாமல் பெண்களின் விழைவுகள் நோக்கங்கள் ஆகியவற்றை ஏற்கும் ஒரு புதிய கலாச்சாரத்தை உருவாக்கப் பாடுபடுகின்றனர்.

ஆணுடன் போட்டியிடவோ, புறந்தள்ளவோ முற்படாமல் பெண்ணின் ஆழ்மன கருத்துக்களை பெண்ணின் தேவை அதைத் தொடர்ந்த மீளாக்கம்தான்

பெண் விடுதலை என்பதை மனதில் கொண்டு இக்கட்டுரைக்கு 'பெண்பாற் புலவர்களும் பெண்ணியக் கவிஞர்களும்" எனத் தலைப்பிடப்பட்டுள்ளது.

## சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகளில் பெண்மை

சங்க இலக்கிய பாடல்களை ஆராயப்புகும் போது ஆண், பெண் இருவரும் ஒத்த உரிமை உடையவராக இருந்தமையை அறிய முடிகின்றது. காதலியை இழந்த தபுதாரா நிலையும் காதலன் இழந்த தாபத நிலையும் எடுத்துரைப்பதால் ஒருவரையொருவர் இழந்து நிற்றல் ஒன்றாகவே கருதப்பட்டது.
சங்க காலங்களில் வீரமிக்க ஆண்மக்களைப் பெற விரும்பியது போலப் பெண் மக்களையும் பெற விரும்பினர் என்பதை,

'குன்றக் குறவன் கடவுப் பேணி
இரத்தனன் பெற்ற அவ்வளைக் குணமகள்" எனக்

(ஐங்குறுநூறு 257)

கபிலர் பாடிய பாடல் வழி அறியலாம்.

சங்க இலக்கியங்கியங்களில் ஆணின் வீரத்தைப் புகழ்ந்து பாடிய புலவர்களின் பெண்ணின் வீரத்தைப் புகழவும் தவறவில்லை மூதின் முல்லை என்ற துறையை பாடு பொருளாகின்ற வீரக்குடியில் பிறந்த ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் வீரமுண்டு என்பதை தான் புகுந்த குடும்பத்திற்குப் புகழ் பெருக்குவது போலத் தான் பிறந்த குடிக்கும் வெற்றியும், புகழும், பீடும், பெருமையும் விளைவிப்பது மகளிரேயாவர் என இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றது.

சங்கப் புறப்பாடல்களில் பெண்பால் புலவர்கள் 72பாடல்கள் பாடியுள்ளனர். அவற்றுள் காக்கைப் பாடினியார் பாடிய பத்துப் பாடல்கள் பதிற்றுப்பத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சங்கப் பெண் கவிஞர்களின் பார்வையில் பெண்மையை அளவீடு செய்து பார்க்கும் போது பெண் விடுதலைச் சிந்தனைகள் குறித்த விதை சங்க இலக்கியத்தில் ஆழமாக வேரூன்றியதை அறியமுடிகின்றது.

ஔவையார், வெள்ளிவீதியார், நச்செள;ளையார், காக்கைப் பாடினியார் போன்ற பெண் கவிஞர்களின் பாடல்கள் பெண்ணியத்திற்கான அனைத்து தன்மைகளையும் உள்ளடக்கியுள்ளதை சங்கப் பாடல்கள் வலியுறுத்துகின்றன.

ஔவையின் பாடல்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது வீரியமிக்க மிகப்பெரிய ஆளுமையை காண முடிகின்றது. ஆண் வகுத்த சமுதாய அமைப்பில் சில நேரங்களில் ஆண்களோடு சமரசம் செய்து கொண்டும் ஆடவருக்கு அறிவுரை வழங்கும் ஆளுமையையும் புறநானூற்றுப் பாடல்வழி வெளிப்படுத்தியுள்ளார்.

சங்க காலப் பெண்களின் வாழ்க்கை மரபுகள் பழக்க வழக்கங்கள் விருந்தோம்பல், பிரிவு, கைம்மை நோன்பு, பெண்கவிஞர்களின் உடல் மொழி போன்ற கருத்துக்களைப் பெண்கவிஞர்கள் பதிவு செய்துள்ளனர்.

## நவீனகால பெண்கவிஞர்களின் கவிதைகளில் பெண்மை

20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெண்கள் தங்கள் உள்உணர்வை தங்கள் சுதந்திரத்தை தாங்களே ஆராயத் தொடங்கியுள்ளனர். இதனால் நவீன கவிதைகளில் புதிய பரிமாணம் உருவாகியுள்ளது. இரண்டாயிரம் ஆண்டு இலக்கியப் பயணத்தில் நவீன யுகத்தில் மட்டுமே பெண் கவிஞர்களின் குரல் கலகக் குரலாகப் பல தடைகளையும் மீறி வெளிவரத் தொடங்கின.

பெண் அடிமைத் தனத்திற்குக் காரணம் பெண் உடலே எனக் கருதிய நவீனப் பெண் கவிஞர்கள் பெண் உடல் மொழியைத் தங்கள் கவிதையில் அதிகமாக எழுத ஆரம்பித்தனர்.

உள்ள ரீதியாகவும், உடல் ரீதியாகவும், பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்பதை சுகிர்தராணி, சல்மா போன்ற நவீன பெண் கவிஞர்கள் படைப்புகளில் காண முடிகின்றது. பெண்கள் தங்களின் உடலில் ஏற்படும் மாற்றங்கள், வலிகள் போன்றவற்றைக் கூறுவதும் பெண் விடுதலை தான் என பெண் கவிஞர்கள் கருதுகின்றனர். தொண்ணூறுகளில் கவிதை மொழியில் தங்கள் உடல் அனுபவங்களையே கவிதையாக்கியுள்ளனர். பெண் எழுத்து ஆபாசமானது எனச் சங்க காலத்தில் வெளிப்படவில்லை. நவீனக் கவிதைகளில் இந்தக் குற்றச் சாட்டு இருபாலராலும் முன் வைக்கப்படுகிறது. தமிழ்ச் சூழலில் மாலதி மைத்ரி, சுகிரத்தராணி சல்மா, கனிமொழி போன்றோரின் படைப்புகளில் உடல்சார்ந்த அனுபவத்தை பதிவு செய்பவையாக இருப்பதால் அவர்களது ஒரு சில படைப்புகள் தரம் தாழ்ந்தவையாகக் கருத இடமுண்டு.

நவீனப் பெண் கவிஞர்கள் குடும்ப அமைப்பு முறையில் மாற்றம், ஓரினப் புணர்ச்சி, தாய்மை மறுப்பு, ஒப்பந்த அடிப்படையில் கணவன், மனைவியாக வாழ்வது போன்ற மேற்கத்திய கலாச்சாரத்தை நமது பாரம்பரியத்தில்

பண்பாட்டை மீறும் செய்கைத் திணித்துள்ளனர் என அவர்களின் படைப்புகளை ஆராயும் போது புலப்படுகின்றது.

பெண் கவிஞர்களின் கவிதைகளை நியாயமான உணர்வுகளைப் பேசும் போது உயிர் பெறுகின்றது. புதிய மொழி நடையில் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் என்று பெரும்பாலான பெண் கவிஞர்களின் கவிதைகளைப் படைத்து வருகின்றனர்.

தமிழ் இலக்கியத்தில் பெண்பாற் புலவர்கள் முதல் பெண்ணியக் கவிஞர்கள் வரை பெண்ணியம் குறித்த கருத்துகளைக் காலந்தோறும் புதுவடிவில் புதுக்கோட்பாடுகளைத் தனித்துவம் மிக்க பதிவுகளாக மாற்றம் பெற்றுள்ளன என்பதை இக்கட்டுரை முழுமையாக எடுத்துக்காட்டியுள்ளது.

## பார்வை நூல்கள்


1. நடராசன் ஔவை புலமைச் செல்வியர் தி பார்க்கர் இராயப்பேட்டை. சென்னை.
2. சுகிர்தராணி அவனை மொழிப் பெயர்த்தல் காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.
3. மாலதி மைத்ரி விடுதலையை எழுதுதல் காலச்சுவடு பதிப்பகம், சென்னை -27.
4. முருகேச பாண்டியன்.ந அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.